**Dinamalar**
**Title :**
**Author :**
**Location :**
**Article Date : 06/06/2011**

# ஜப்பானில் சுனாமியால் துவண்ட மக்களுக்கு ஆரோவில் உபாசனா சார்பில் சுனாமிகா பொம்மைகள்

புதுச்சேரி, ஜூன் 6-

ஜப்பானில் ஏற்பட்ட சுனாமியால் நிம்மதி இழந்துள்ள மக்கள் மீண்டும் சந்தோஷ நிலைக்கு திரும்பும் நோக்கில், ஆரோவில் உபாசனா நிறுவனம் ஒரு லட்சம் 'சுனாமிகா' பொம்மைகளை அனுப்பி வைத்துள்ளது.

கடந்த 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் ஏராளமானோர் தங்களது வீடு மற்றும் சொந்த பந்தங்களை இழந்தனர். இத்தகைய மக்களை மீட்கும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டது தான் ஆரோவில் உபாசனா தொண்டு நிறுவனம்.

உறவுகளை இழந்தோருக்கு மனரீதியான ஆறுதலை வழங்குவது இதன் முக்கிய பணியாகும். இதன் அடிப்படையில், மறுவாழ்வின் அடையாளமாக 'சுனாமிகா' என்ற பொம்மைகளைத் தயாரித்து வருகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவப் பெண்களே தம் கைவண்ணத்தால் இந்த பொம்மைகளை தயாரித்து வருகின்றனர்.

இந்த பொம்மைகள் லாப நோக்கில் உருவாக்கப்படுபவை அல்ல. சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளில் மறு வாழ்வு ஏற்படுத்தும் வகையில் இந்நிறுவனத்தின் மூலம் சுனாமிகா பொம்மைகள் அனுப்பப்படுகிறது.

சமீபத்தில் ஜப்பானில் நிகழ்ந்த சுனாமி பேரழிவில் துவண்டுபோன மக்கள் மீண்டும் சந்தோஷ நிலைக்குத் திரும்ப வேண்டும் என்ற நோக்கில், ஒரு லட்சம் சுனாமிகா பொம்மைகளை, உபாசனா அனுப்பி வைத்துள்ளது.

இது குறித்து சுனாமிகா திட்டக்குழு தலைவர் விவேக் கூறியதாவது:

சுனாமிகா, எங்கள் உபாசனாவின் செல்லக் குழந்தை. துவண்டு போன மக்கள் இந்த பொம்மையை சிறிது நேரம் உற்று நோக்கினால் போதும், முகத்தில் சிரிப்பலை வீசும். தற்போது, ஜப்பானில் ஏற்பட்ட சுனாமியால் ஏராளமான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

பலர் தங்களது குடும்பங்களை இழந்து வாடி வருகின்றனர். பணம் கொழிக்கும் ஜப்பானில், மீண்டும் சிரிப்பலை தான் தேவை. அங்கு மக்கள் மீண்டும் சந்தோஷ நிலைக்குத் திரும்பும் வகையில் எங்கள் நிறுவனம் சார்பில் சுனாமிகா பொம்மை, பீஸ் போட் என்ற அமைப்பின் உதவியால் அனுப்பப்பட்டுள்ளன.

இந்த பொம்மைகள் ஜப்பானில் மிகப் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன. அங்கு குழந்தைகள் தின விழாவில் குழந்தைகள் கையில் சுனாமிகா பொம்மை வழங்கப்பட்டுள்ளது.

கடற்கரையை ஒட்டியுள்ள இஷிநோமகி நகரத்தை அடுத்த வாடாரிஹா ஆரம்பநிலைப் பள்ளியில் வழங்கப்பட்ட சுனாமிகா, குழந்தைகள் முதல் அனைவரையும் கவர்ந்துள்ளது.

இவ்வாறு விவேக் கூறினார்.